# THE MESSAGE OF THE HOUR OUTREACH

CALEB JOSHUA
Tele : 04630 456157

"HOREB"
SRIVAIKUNTAM – 628 601
THOOTHUKUDI DIST.

பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு: கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் எழுதுகிறதாவது:

உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

1. பிரியமானவர்களே, இந்நாட்களில் **இயேசு கிறிஸ்துவினால் தீர்க்கதரிசிக்கு அளிக்கப்பட்டதும், தீர்க்கதரிசியினால் மணவாட்டிக்கு அளிக்கப்பட்ட செய்தியின் குறிப்புகள்** என்ற தலைப்பின் கீழ் ஐந்து செய்திக் குறிப்புகள் யாரால் தொகுக்கப்பட்டது என்பது குறித்து எதுவும் கூறப்படாமல், வழிகாட்டுதலுக்கு சகோ.M.மணி, கடைசிக்கால செய்தி, No.12, காமராஜ் தெரு, நேதாஜி ரோடு, திருநெல்வேலி-627 006 என விலாசம் கொடுக்கப்பட்டு, அதன் பிரதி ஒன்று எனக்கு அனுப்பப்பட்டிருந்தது.

2. ஒரு வாரத்திற்கு பின்பு, **எலியேசர் ஊழியம் தீர்க்கதரிசி வில்லியம் மரியன் பிரன்ஹாம் மூலம் நிறைவேறிற்று** என்ற செய்திக்குறிப்பு யாரால் தொகுக்கப்பட்டதென்றோ, அதில் தொடர்புக்கு எந்தவிதமான விலாசம் எதுவுமின்றி மொட்டையாக காணப்பட்டு, அதன் பிரதி ஒன்றை சகோ.மணி எனக்கு அனுப்பியிருந்தார்.

3. ஆக இந்த இரு செய்தித் தொகுப்புகளுக்கு பின்னால் சகோ.மணி இருக்கிறார் என அறிந்துகொண்டேன். இவரை பல ஆண்டுகளாக நான் அறிவேன். இவரது சபையில் கூட, கூடிய மட்டும் பெரும்பாலானோரை நான் நன்கு அறிவேன். இவர் தீர்க்கதரிசியின் செய்திகளை அறிகிற அறிவில் போதுமான ஞானம் இல்லாதவர். ஆனால் இவரைவிட, இவரது சபையில் சில சகோதரர்கள் அதிக ஞானம் உள்ளவர்கள். இவர்கள் யாராலும் இவ்வளவு பெரியதொரு செய்தித் தொகுப்புக்களை, தீர்க்கதரிசியின் செய்தியிலிருந்து உருவாக்க முடியாது. ஆக இது முற்றிலுமாக இவர்களது வேலைப்பாடுகள் அல்ல. இவர்கள் பினாமிகளே என்பதை நான் கண்டு கொண்டேன்.

4. வெளிநாட்டுச்சரக்கு ஒத்தாசையுடன், இந்தச் செய்திக் குறிப்புகளை தொகுத்து கொடுத்தவர் பாஸ்டர்.S.ஜெயராஜ் (புதுக்கோட்டை) அவர்களே. ஏனென்றால் செய்திக் குறிப்புகளை இவ்வளவு ஞானமாக தொகுத்து, மக்களைத் திசை திருப்பும் லௌகீக ஞானம் முன்னாள் பாலாசீர் லாறி மணவாட்டிகளுக்கே உண்டு. இவர்தான் இந்நாட்களில் தனக்கு சாதகமாக தீர்க்கதரிசியின் செய்திகளை தன் மனம்போன போக்கில் தொகுத்து, தான் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த சரக்குகளையும் அத்துடன் சேர்த்து ஒரு கதம்பமாக்கி பற்பல இடங்களுக்கு அதைக் கொண்டுசெல்கிறார். வெளிநாட்டுப் பணபலத்தினால், இவர்சில பினாமிகளை **(சகோ.A.கிறிஸ்டோபர் ராஜ்குமார் சென்னை, சகோ.குபன் - திருச்சி, சகோ.பால் நெவில் - கோவை. இவர்கள் மூவரும் முன்னாள் கிறிஸ்து பிரன்ஹாம் பக்தசிகாமணிகள் - மணவாட்டிகள். சகோ.M.மணி நெல்லை. இவர் முன்னாள் கிறிஸ்து சொல்விளங்குவின் மணவாட்டி)** ஆங்காங்கே கூலிக்கு மாரடிக்க நியமித்துக்கொண்டு, இறக்குமதி செய்த உபதேசங்களை பற்பல இடங்களுக்குச் சென்று பிரசங்கித்து வருகிறார்கள். தீர்க்கதரிசியின் செய்தி மூலமாக கற்றுக்கொண்ட உபதேசங்களுக்கு மாறாக, விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்கி, நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சித்து சபைகளை பாழாக்கி வருகிறார்கள். இழிவான சுயநல ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து, அநேக விசுவாசிகளுடைய குடும்பங்களை கவிழ்த்துப்போடுகிறார்கள்.

5. பாஸ்டர்.S.ஜெயராஜ், அப் 2:38ன் படி ஞானஸ்நானம் பெற்று, ஸ்ரீ நாராயண பகவானின் பத்தாவது அவதாரம் என்றும், நம அய்யா ஸ்ரீ லஹரி கிருஷ்ணா என்றும், ஸ்ரீ குருதேவ் லஹரி கிருஷ்ணா லாறி என்றும், மனுஷகுமாரன் (இயேசு கிறிஸ்து) என்றும் பலவாறு அழைக்கப்பட்ட ஸ்ரீ ராசையா பாலாசீர் லாறி முத்துகிருஷ்ணாவை தன்னுடைய மணவாளனாகிய கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்டு, தன் ஆஸ்திகளை விற்று அவர் பாதபடியில் அர்ப்பணித்து, பிழைப்புக்கடுத்த தொழிலை விட்டுவிட்டு, லாறியின் இஸ்லத்து நாயகிகளில் ஒன்றாக இணைந்து, இல்லறவாழ்க்கை நடத்தி, தன் ஆவிக்குரிய கற்பை இழந்து, பின் சீ சீ இந்தப்பழம் புளிக்கிறது எனக்கூறி, வீட்டை விட்டு வெளியேறி, பசியிலும் பட்டினியிலும் வாழ்ந்து, டாக்டர்.S.C.ஜேக்கப்க்கு பிறகு, கனடா நாட்டு முதலாளி சகோ.எட் பிஸ்கல் கருணையினால் உயர்த்தப்பட்டு, அதன்பின் சில வெளிநாட்டு முதலாளிகள் ஆதரவால் தன் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டவர். சகோ.எட் பிஸ்கலுக்கு எப்பொழுதுமே ஒரிஜினல் சரக்கு பிடிக்காது, இவருக்கு டூப்ளிகேட் சரக்குகள் மீதுதான் அதிக நாட்டம். ஏனென்றால் ஒரிஜினல்கள் இவரை ஒரு பொருட்டாக எண்ணாது. இவருக்கு தனக்கு ஆம் ஆம் என்று சொல்லுகிற தலையாட்டி பொம்மைகளே அதிக பிடித்தம். தலையாட்டி பொம்மைகளுக்கு வெளிநாட்டினர் பணத்தின் மேல் நாட்டம். சகோ.ஜெயராஜ்க்கு வில்லியம் பிரன்ஹாம் நற்செய்தி கழகத்தில் முக்கிய பதவி கிடைத்தது. ஆதலால் இவரது அந்தஸ்து கூடியது. இவரை கையில் பிடிக்கமுடியவில்லை. அடிக்கடி அமெரிக்கா, கனடா, ஆப்பிரிக்கா பறக்கலானார். பணமும் சம்பாதிக்கலானார். பணம் சம்பாதிக்க பதவியை காத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. ஆதலால் சில பினாமிகளை ஆங்காங்கே ஏற்படுத்தி, தன் பெயரை

வெளியிடாது, மறைமுகமாக தான் இறக்குமதி செய்தச் சரக்குகளை விநியோகம் செய்துவருகிறார். அதோடு மட்டுமல்ல கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி இவரும், இவரது பினாமிகளும் தமிழகமெங்கும் சுற்றித்திரிகிறார்கள்.

6. அடுத்த பினாமி சகோ.M.மணி. இவர் திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் என்ற இடத்தில் சகோ.சொல்விளங்கு என்பவரால் வழிநடத்தப்பட்ட சபையில் அங்கத்தினராக இருந்து வந்தார். சகோ.சொல்விளங்கு தன்னைத்தான் நாளுக்குநாள் மிகைப்படுத்தி, அதன் பிரதிபலனாக, கிறிஸ்து இங்கே இருக்கிறார், இதோ இருக்கிறார், எனக்குள்ளே இருக்கிறார் எனக் கூறி தன்னைத்தானே கிறிஸ்துவாக்கிக் கொண்டார். சகோ.மணி போன்ற விசுவாசிகள் உடனே தங்கள் சொத்து, ஆஸ்திகளை விற்றார்கள். வீட்டு தட்டுமுட்டு சாமான்களை விற்றார்கள். தங்கள் கைத்தொழிலை மறந்தார்கள். தங்கள் மணவாளனிடம் சரணாகதியடைந்தார்கள். மணவாளனும் மணவாட்டிகளும் இல்லறவாழ்க்கை நடத்தினார்கள். மணவாளன், தன் மணவாட்டிகளை ஓரிரு மாதம் போஷித்தார், பராமரித்தார். வெளியில் அரிசி, பருப்பு, புளி கடன் கொடுக்க வியாபாரிகள் மறுத்துவிட்டனர். முடிவில் பசியும் பட்டினியும் தாண்டவமாடியது. மணவாட்டிகள் வெட்கி, நாணி, வெளியேறினார்கள். நாய் தான் கக்கினதைத் தின்னவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது. இவ்வாறாக வஞ்சிக்கப்பட்டு திரும்பினவர்களில் ஒருவர்தான் இந்த வழிநடத்துனர் சகோ.மணி.

7. ஆக, ஆவிக்குரிய விபச்சாரச் சந்ததியாராகிய முன்னாள் குருதேவ் லஹரியின் மணவாட்டிகள், கிறிஸ்து பிரன்ஹாமின் மணவாட்டிகள், சொல்விளங்கின் மணவாட்டிகள் ஒன்றுசேர்ந்து, ஒருமனப்பட்டு, ஒற்றுமையுடன் இக்கடைசிகாலச் செய்திக்கு மாறாக அநேக மாறுபாடான உபதேசங்களை போதித்து வருகிறார்கள். மக்களை வழிவிலகச் செய்கிறார்கள். விசுவாசக் கப்பலை சேதப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் மணவாட்டியை வழிநடத்துவதற்கு இவர்களுக்கு யோக்கியதையே இல்லை என்பதை நீங்கள் முதலில் அறிந்து கொள்ளுங்கள்.

8. கற்புள்ள கன்னிகைகள், புத்தியுள்ள கன்னிகைகள் ஒரே ஒரு தலைமையை மாத்திரமே ஏற்றுக்கொள்வார்கள். அதுதான் கிறிஸ்து. இவர்கள் எங்கும், எந்த சூழ்நிலையிலும், ஒருபோதும் கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த தலைமையையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படியானால் பாலாசீர் லாறியின் மணவாட்டிகள், கிறிஸ்து பிரன்ஹாமின் மணவாட்டிகள், சொல்விளங்குவின் மணவாட்டிகள் யார்? நீங்களே நிதானித்து கொள்ளுங்கள். எழுதினவைகளையே திரும்ப திரும்ப எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அவைகள் உங்களுக்கு நலமாயிருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். ஓநாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

9. இவர்களது செய்திக் குறிப்புகளுக்கு இந்த விளக்கவுரையை, எனது முந்தின **1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டதா?** என்ற செய்தித் தொகுப்புகளுடன், கூடுதல் தொகுப்புகளாக வெளியிடுகிறேன். முந்தினதையும், இதையும் இணைத்து தியானியுங்கள். அப்பொழுது உங்களுக்கு பிசாசின் தந்திரங்களும், வஞ்சகமும் புலனாகும்.

10. சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல உங்கள் மனதும் கர்த்தருடைய வருகையைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ என்று பயந்து மீண்டும் இந்த செய்தி தொகுப்புகளை மிகுந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் தொகுத்து வெளியிடுகிறேன்.

11. **தலைக்கல் வந்துவிட்டதா?** என்ற இவர்களது செய்திக் குறிப்புகளை, இவர்களது முதற்புத்தகம், பக்கம் 4 & 5ல், பத்தி 9 முதல் 18 வரை தியானித்தேன்.

**ஒன்றாயிருத்தல்** செய்தியில் பக்கம் 59, பத்தி 183ஐ குறிப்பிட்டு **இப்பொழுது அவர் பெந்தெகொஸ்தேயிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அழைந்து தலைக்கல் அதற்குள் வரும்படி செய்கிறார்** என செய்திக் குறிப்பு 12வது பத்தியில் உள்ளது. மேலும் 18வது பத்தியில் **அவர் சீக்கிரமாக வந்து சரீரத்தை உரிமைகோரி பெற்றுக்கொள்வார். ஆமென்! தலையானது சரீரத்துக்கு வருகிறது. உங்களுக்கு புரிகிறதா?** என்ற பகுதியை **கேள்விகளும் பதில்களும்** 2:20ல் பக்கம் 47, பத்தி 16லிருந்து குறிப்பிட்டுள்ளார்கள்.

12. **ஒன்றாயிருத்தல்** செய்தி 11.2.1962ல் பிரசங்கிக்கப்பட்டது. இங்கு **சரீரத்துக்குள் தலைக்கல் வரும்படி செய்கிறார்** என தீர்க்கதரிசி கூறுகிறார். **கேள்விகளும் பதில்களும் 2:20** பகுதி 23.8.1964ல் பிரசங்கிக்கப் பட்டது. இங்கு **தலையானது சரீரத்துக்கு வருகிறது** எனக் கூறுகிறார். Head is coming to the Body. இந்த இரு பகுதிகளிலும் **தலைக்கல் வந்துவிட்டது** என தீர்க்கதரிசி கூறவேயில்லை.

13. மேலும் நீங்கள் இதே **கேள்விகளும் பதில்களும்** 2:20ல், 118வது பத்தியை வாசித்தால் அங்கு தீர்க்கதரிசி **தலைக்கல் இனி வரவேண்டும்** எனக் கூறுகிறார். The Headstone is yet to come. செய்தி இவ்வண்ணமாக இருக்க, இவர்கள் தலைக்கல் வந்துவிட்டது என்று கூறுவது எப்படி?

14. தீர்க்கதரிசி 1965ல் பிரசங்கிக்கிறார் **அவருடைய நாமத்துக்கென்று சபை வெளியே அழைக்கப்பட்டு வருகிறது. அவர் உலகில் உள்ள எல்லா ஸ்தாபனங்களிலிருந்தும், உலகிலிருந்தும், உலகத்தின் அசுத்தத்திலிருந்தும், உலகத்தின் காரியங்களிலிருந்தும் தமது மணவாட்டியை வெளியே**

**அழைத்துக் கொண்டிருக்கிறார்.** (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு பக்கம் 70, கடைசி பத்தி) 1965 வரை மணவாட்டியை தேவன் வெளியே அழைத்துக்கொண்டிருக்கும் வேளையில், இவர்கள் 1963ல் தலைக்கல் வந்துவிட்டது என்று எப்படி உபதேசிக்க முடியும்? கடைசி நபர் சரீரத்துக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டப் பிறகு கிறிஸ்து வருவார். அது எப்பொழுது? நாம் அறியோம். தேவன் ஒருவரே அறிவார்.

15. **ஆக 1965 வரை தலைக்கல் வரவில்லை. அது இனி வரவேண்டியதாயிருக்கிறது என செய்தி கூற, இவர்கள் 1963ல் தலைக்கல் வந்துவிட்டது என்று உபதேசிப்பது, வருவதற்காக ஒன்றை வாஞ்சையுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, வந்துவிட்டது எனக்கூறி அவர்களை சோர்ந்து போகச்செய்து, பந்தயப் பொருளை இழக்கச்செய்யும் சாத்தானின் இக்கடைசிக்கால கொடிய வஞ்சகமாகும்.**

16. **தலைக்கல் சரீரத்துடன் இணைந்து விட்டதா?** இவர்கள், தீர்க்கதரிசியின் காலத்தில் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார், தலைக்கல் சரீரத்துடன் இணைந்துவிட்டது, இப்பொழுது நான் சகோ.மணி அல்ல, நான் கிறிஸ்து: நான் பாஸ்டர் ஜெயராஜ் அல்ல, நான் கிறிஸ்து என்கிறார்கள். ஆனால் இவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்துவை பிரதிபலிக்கக் காணோமே.

17. 1965 வரை தலைக்கல் வரவில்லை எனப் பார்த்தோம். ஆதலால் 1963லே தலைக்கல் வந்து சரீரத்துடன் இணைந்து விட்டது என்பது ஒரு தவறான உபதேசமே.

18. தீர்க்கதரிசி காலத்தில் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார். தலைக்கல் அப்பொழுது சரீரத்துடன் இணைந்து விட்டது என்கிறார்கள். இவர்கள் இதற்கு ஆதாரமாக **ஏழு முத்திரை,** பக்கம் 963, பத்தி 327ஐ குறிப்பிடுகிறார்கள். **ஒரே சமயத்தில் நாங்கள் இருவர் இருக்கமுடியாது. பாருங்கள்? அப்படி இருக்க நேர்ந்தால், அவர் பெருக வேண்டும், நான் சிறுக வேண்டும். எனக்குத் தெரியாது** எனத் தீர்க்கத்தரிசி கூறுவதை எடுத்துக் கொண்டார்கள். இங்கு தீர்க்கதரிசி **எனக்குத் தெரியாது** என்றுகூறி அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இப்படி இருக்க மனதை மயக்குகிறவர்கள் தங்களுக்கு எல்லாம்தெரியும் என அலட்டிக்கொள்வதென்ன?

19. நீங்கள், **ஏழு முத்திரைகள்** பக்கம் 962ல் பத்தி 321க்கு வாருங்கள். அங்கு **அவருடைய ஜனங்கள் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை எதிர்நோக்கி இருக்கின்றனர்** எனக்கூறி, பத்தி 326ல் **அந்த மகத்தான நபர் தோன்ற நாம் எதிர்பார்த்து கொண்டிருக்கிறோமே. அவர் தோன்றும் நேரம் இப்பொழுதாக இருக்கலாம் (கிறிஸ்துவின் வருகை வந்துவிட்டது என்று கூறவில்லை - கா.யோ) ஜனங்களை தேவனுடைய வார்த்தைக்குத் திருப்ப முயன்ற என்னுடைய ஊழியம் ஒருக்கால் அதற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கும்** என்கிறார்.

20. இந்தப் பகுதிகளை நன்கு தியானியுங்கள். ஜனங்கள் கிறிஸ்துவினுடைய / மணவாளனுடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர் தோன்றும் நேரம் இதுவாக இருக்கலாம், என்னுடைய ஊழியம் அதற்கு அஸ்திபாரம் என்றே தீர்க்கத்தரிசி இங்கு கூறுகிறார். மணவாளனாகிய கிறிஸ்து தம்முடைய மணவாட்டிக்காக வந்துவிட்டார் என்று கூறவேயில்லை. அதாவது தலைக்கல் வருகிறதற்கு அவருடைய ஊழியம் ஒரு அஸ்திபாரம் என்கின்றாரேயன்றி தலைக்கல் வந்துவிட்டது எனக்கூறவேயில்லை.

21. **தலையும், சரீரமும் ஒன்றாக இணையும்போது என்ன நிகழும்?** இது தேவனும் அவருடைய மணவாட்டியும் இணையும் நேரமும் கூட...... கிறிஸ்துவின் மணவாட்டி அழைக்கப்பட்டாள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவள் தேவனுடைய ராஜ்யத்தில் முத்தரிக்கப்பட்டாள் என்று நான் விசுவாசிக்கிறேன். எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு இயங்க ஆயத்தமாயுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேனன். **அவர்கள் பூமியிலிருந்து அவளை மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுதலில் கொண்டு செல்லவிருக்கும் இயக்கும் சக்திக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். ......அவரே இயக்கும் சக்தி .... மணவாட்டி சபையின் இயக்கும் சக்தி பரிசுத்த ஆவியினால் மறுபடியும் நிரப்பப்படுவதே. சரீரத்துடன் இணைய தலைக்கல் வந்துகொண்டிருக்கும் நேரத்தில், நாம் பரிசுத்த ஆவியை அளவுடன் பெற்றுக் கிரியை செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் தலையும் சரீரமும் ஒன்றாக இணையும்போது பரிசுத்த ஆவியின் முழு வல்லமை அவளை சரியாக அதே விதமாக எழுப்பும்.** மரித்தவர்கள் கூட, நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவருடைய பரிசுத்த அலங்காரத்துடன் உயிரோடெழுந்து வானங்களின் வழியாக பறந்துசெல்வார்கள். **இயக்கும் சக்தி பரிசுத்த ஆவியே.** (கிறிஸ்து எண்ணப்பட்ட இயேசுவை நாங்கள் என்ன செய்யவேண்டும்? பத்தி 115,116. செய்தி நாள் 24.11.1963.)

22. இந்தப் பகுதியை நாம் நன்கு தியானித்தால், நாம் இப்பொழுது பரிசுத்த ஆவியை அளவுடன் பெற்று கிரியை செய்துகொண்டிருக்கிறோம். தலையும் சரீரமும் இணையும்போது பரிசுத்த ஆவியின் முழு வல்லமை மணவாட்டியை உயிருடன் எழுப்பும். **அந்த இயக்கும் சக்திக்காக மணவாட்டி காத்துக்கொண்டிருக்கிறாள்** எனக் காண்கிறோம். இந்த இயக்கும் சக்தியை நம்முடைய மேதாவிகள் பெற்றுவிட்டார்களா? அதாவது பரிசுத்த ஆவியின் முழு வல்லமையை பெற்றுவிட்டார்களா? **இல்லவே இல்லை. இவர்கள்** செய்திகளை சரியாகப் புரிந்துகொள்ளாமல் கூத்தாடுகின்றனர். ஏன்? கூலிக்காக.

23. **இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று** என்ற செய்தியில் 227வது பத்தியை கொண்டு **இந்த சந்ததி இயேசு கிறிஸ்து பூமிக்கு திரும்புவதைக் காணும். நீங்கள் காண இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்று இன்றிரவு மறுபடியும் கூறுகிறேன்** என்று தீர்க்கதரிசி கூறுவதைக்கொண்டு

தீர்க்கதரிசி காலத்தில் மணவாளனாகிய கிறிஸ்து பூமிக்கு வந்துவிட்டார், எலியேசர் மணவாளனுக்கு ரெபேக்காளை அறிமுகப்படுத்தி விட்டான் என்று தாங்கள் கூறுவது இன்னதென்று புரியாமல் புலம்புகிறார்கள்.

24. நீங்கள் இந்த செய்தியில் 169வது பத்தியிலிருந்து 228வது பத்தி வரை பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால் தியானித்தால் உங்களுக்கு முழு விபரங்கள் புலனாகும். ஆரம்பத்தை பாருங்கள் **இந்த நாளைக்குறித்தும் நாம் வாழும் சமயத்தைக் குறித்தும் வேதவாக்கியம் என்ன கூறுகிறது? .... சோதோமின் நாட்களில் எப்படி இருந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் நடக்கும்** என்றார். லூக்.17:28-30.

25. இப்பொழுது 172 வது பத்திக்கு வாருங்கள். **நாம் வாழும் இந்த கடைசிக் காலத்திலே சோதோமில் எப்படி நடந்ததோ, அப்படியே நடக்கும்போது மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்படுவார்** என்று இயேசு கூறினார்.

மீண்டும் 211 வது பத்தியை வாசியுங்கள். **சோதோமின் நாட்களில் எப்படி இருந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வருகையிலும் இருக்கும். ஆமென். அந்த நாள் இதுவே என்றால், இந்த வேதவாக்கியம் நிறைவேறிற்று** என்றார். அதாவது லூக் 17:30 ன் நிறைவேறுதலையே தீர்க்கதரிசி இங்கு குறிப்பிடுகிறார்.

26. இந்த லூக் 17:30 ன் நிறைவேறுதலைத்தான் **கடைசி நாளில் வாழ்ந்துகொண்டிருக்கும் சந்ததி இயேசு கிறிஸ்து பூமிக்கு திரும்புவதைக்காணும், நீங்கள் காண இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று** என 227 வது பத்தியில் கூறுகிறார்.

27. **குருடராகிய இவர்கள் லூக் 17:30 நிறைவேறுதலுக்கும், கர்த்தருடைய வருகைக்கும் வித்தியாசம் தெரியாது குருடர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

28. **நாம் இயேசுவின் வருகைக்கு அருகில் இருக்கிறோம். அப்பொழுது அவருடைய சபையுடன் அவர் இணைந்து, வார்த்தை வார்த்தையாகும்.** (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு. பக்கம்60, பத்தி 2, நாள் 25.11.1965.) லூக் 17:30 கிறிஸ்துவின் வருகைக்கு முன் அவரை அறிமுகப்படுத்துவதாகும். அதாவது மனுஷகுமாரன் தன்னை வெளிப்படுத்துவதாகும்.

29. **ஏழாம் சபைக்கால தூதன் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல.** அன்று அந்த நட்சத்திரங்கள் ஒரு கூட்டமாகச்சேர்ந்து, அந்த தூதன் தோன்றி **யோவான் பழைய ஏற்பாட்டை முடித்து இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்த எவ்வாறு அனுப்பப்பட்டானோ அவ்வாறே உன் செய்தியும் தளர்ந்துள்ள முனைகளை ஒன்று சேர்த்து மேசியாவின் வருகைக்கு சற்று முன்பாக அவரை அறிமுகப்படுத்தும்** என்றார். (ஐயன்மீர், இதுவா சமயம்.? பக்கம் 70, கடைசி பத்தி)

30. There is going to be a Message comeforth, that will introduce the Messiah to the people. And it'll be in such a way, they'll stand dumb founded like they did then. He promised it. (The voice of the sign. Para 152, Dt. 21.3.1964) இந்த ஆங்கிலப் பகுதியிலிருந்து 1964 வரை செய்தி மணவாளனாகிய கிறிஸ்துவை மணவாட்டிக்கு அறிமுகப்படுத்தவில்லை எனத் தெரிகிறது. ஆனால் நமது அதிகப்பிரசங்கிகள் எலியேசர் மணவாளனை மணவாட்டிக்கு 1963ல் அறிமுகப்படுத்திவிட்டார் என்கிறார்கள். **செய்திதான் மணவாட்டிக்கு மணவாளனை அறிமுகப்படுத்தும். ஏனென்றால் இக்கடைசி கால செய்தி - சத்தம் கர்த்தருடையது.**

31. இங்கு நன்கு கவனித்தீர்களானால், யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவரை அறிமுகப்படுத்த அனுப்பப்பட்டான். ஆனால் சகோ.பிரன்ஹாம் அவ்வண்ணமாக அல்ல. **அவருக்கு தேவனால் கொடுக்கப்பட்டச் செய்தி - சத்தம் மேசியாவின் வருகைக்கு சற்று முன்பு அவரை அறிமுகப்படுத்தும். செய்தியே அறிமுகப்படுத்தும். சகோ.பிரன்ஹாம் அறிமுகப்படுத்துவதில்லை.** இன்று சகோ.பிரன்ஹாம் நம் மத்தியில் இல்லை. மரித்தோர் உயிர்த்தெழும் நாளில் அவரும் உயிர்த்தெழுவார். ஆனால் அவர் மூலமாக மணவாட்டிக்கு கொடுக்கப்பட்டச் செய்தி இன்றும் நம் மத்தியிலிருந்து நம்மை எடுத்துக்கொள்ளப் படுதலுக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. அல்லேலூயா !

32. A voice came that shook all around the place there, said, "As John, the Baptist, was sent to forerun the first coming of Christ, the message that is given you will be a forerunning of the Second coming of Christ, "**Not that I would be a forerunner, but the message was the forerunning.**" I know no more than anyone else. It's the Christ we're speaking of. (Testimoney William Branham. San.Juan. PR.Wednesday. 02.10.1960)

33. உங்களுக்கு அது ஞாபகமுள்ளதல்லவா? **கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானகன் அனுப்பப்பட்டது போல, உன் செய்தி.... கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாயிருப்பது இந்த செய்தியே. அப்படித்தான் கர்த்தருடைய தூதன் உரைத்தான்.** (கேள்விகளும் பதில்களும் 2:12 பக்கம் 100, பத்தி 384. நாள் 12.1.1961)

34. 1933ம் ஆண்டு ஜுன் மாதம் 15ம் தேதி மதியம் சகோ.பிரன்ஹாம், அமெரிக்காவில் ஓகியோ

நதிக்கரையில் சுமார் 500 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க நின்றுகொண்டிருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு 17 வது நபருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் **மேலே பார்** என்றதொரு சத்தத்தைக் கேட்டார். பார்த்தபோது தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதுபோல **உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும்** என்று விளம்பிற்று. பாருங்கள், சகோ.பிரன்ஹாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல. அவர் மூலமாக தேவன் கொடுத்தச் செய்தியே கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி. அதாவது மல்கியா 4 மூலம் தேவன் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்திற்கு திருப்புவதற்காக கொடுக்கப்பட்ட செய்தி. இது கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தும் ஆரவாரம்-செய்தி. 1தெச. 4:16. இதைக்குறித்துதான் தீர்க்கதரிசி **மேசியா வருகைக்கு சற்று முன்பு அவரை அறிமுகப்படுத்தும்** என ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம் 70, கடைசி பத்தியில் கூறுகிறார். வெளி. 10:6 ஐ வாசியுங்கள் **ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே** என உள்ளது. ஏழாம் தூதனுடைய நாட்களிலே அல்ல. ஏழாம் தூதன் இன்று நம் மத்தியில் இல்லை அவர் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்துவிட்டார். மரித்தோர் உயிர்த்தெழும்போது அவரும் அவர்களுடன் உயிர்த்தெழுவார். ஆனால் அவர் மூலமாக தேவன் கொடுத்த செய்தி-சத்தம் இன்றும் நம் மத்தியில் இருந்துகொண்டு, மணவாட்டியை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் செய்தி கர்த்தருடையது.

35. **Then I'll meet you again, some of these glorious mornings, at the resurrection, when the saints (The redeemed) are brought back to earth again for the great millennium. I hope to spend an endless Eternity with you in the Kingdom of God, to which I represent here to night (God has a provided way. Volume 25:9, Page 2, Para 14, Dt. 04.04.1954) I will meet them at a Supper, when the battle is all won and the great table is spread across the canopies of the sky, and we sit and look across. (Who is Jesus. Volume 20:4, Page 23, Para 163, Dt. 20.6.1964)**

36. **எலியேசர் ஊழியம் தீர்க்கதரிசிக்கு கொடுக்கப்படவில்லை.** எலியேசர் ஊழியம் தீர்க்கதரிசிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். எலியேசர் ஊழியம் ஏழாம் தூதனுக்கு உண்டு என்று தேவன் சொல்லி இருக்கிறார் என்கிறார்கள். ஆனால் அதற்கு வேதத்திலிருந்து ஆதாரங்கள் கொடுக்கவில்லை. இவர்கள் **வெட்கப்படுதல்** செய்தியிலிருந்து 240 வது பத்தியை சுட்டிக்காட்டி, தீர்க்கதரிசிக்கு எலியேசர் ஊழியம் உண்டு என்று கூறுகிறார்கள். இது தவறு. இங்கு தீர்க்கதரிசி தன் அனுபவத்தை (**Little experience**) கூறி ஜெபிக்கிறார். இதைக்கொண்டு இவருக்கு எலியேசர் ஊழியம் என கூறமுடியாது. ஏதற்கும் வேதத்தில் ஆதாரங்கள் வேண்டும்.

37. பொதுவாக, என் ஜனங்களே நீங்கள் சபை ஸ்தாபனங்களுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள் என்று அழைக்கும், கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரர்கள் அனைவரும் ஒரு வகையில் எலியேசர்களே. ஏனென்றால் இவர்கள் ஊழியமும் சபை ஸ்தாபனங்களிலிருந்து மணவாட்டியை வெளியே கொண்டு வருவதே. பொதுவாக ஊழியக்காரர்கள் யாவரும் எலியேசர் என்ற முறையில் தீர்க்கத்தரிசி **எனக்கு முன்பாக, எங்களுக்கு முன்பாக, நாங்கள்** என்று பன்மையில் கூறி, இதர ஊழியர்களையும் தன்னுடன் இணைத்துக் கொள்கிறார்.

38. ஆபிரகாமின் ஊழியக்காரனாகிய எலியேசருடைய ஊழியத்தை கவனியுங்கள். அவன் ஒரு கூட்டம் பெண்களை வெளியே அழைத்துக் கொண்டு வரவில்லை. அவர்களை அழைத்துக்கொண்டு வந்து ஈசாக்கிடம் ஒப்படைக்கவுமில்லை. இதிலிருந்து ஈசாக்கு தன் மணவாட்டியை தெரிந்தெடுக்கவுமில்லை. ஈசாக்குக்கென்று முன் குறிக்கப்பட்ட, தெரிந்துகொள்ளப்பட்ட, அவன் சரீரத்தின் பாகத்தை மட்டுமே அவன் சந்தித்து, அவளை கூட்டிச்சென்று ஈசாக்கினிடம் வயல் வெளியில் அறிமுகப்படுத்தி ஒப்படைத்தான். ஈசாக்கு அவளை தன் தகப்பன் வீட்டுக்கு அழைத்து சென்றான்.

39. தீர்க்கதரிசிக்கும் எலியேசர் ஊழியம் என்று கூறினால் தீர்க்கதரிசியும் கிறிஸ்துவுக்கு முன் குறிக்கப்பட்ட மணவாட்டியை மட்டுமே தெரிந்துகொண்டு, அவளை அழைத்துச்சென்று, ஆகாயத்தில் அவளை கிறிஸ்துவுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தை தீர்க்கதரிசி செய்யவில்லை. இவருடைய ஊழியத்தில் ஸ்தாபனத்தை விட்டு வெளிவந்தவர்களில் உண்மையான விசுவாசி (மணவாட்டி), அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் உண்டு. அதாவது புத்தியுள்ள கன்னிகைகளும் புத்தியில்லாத கன்னிகைகளும் உண்டு. இவருடைய ஊழியத்தில் இவர் புத்தியுள்ள கன்னிகைகளை மட்டும், உண்மையான விசுவாசிகளை மட்டும் தெரிந்தெடுக்கவில்லை. ஆனால் அங்கு எலியேசர் தன் ஊழியத்தின் முதற்கட்டத்திலே மணவாட்டியை கண்டடைந்தான்.

40. கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை தெரிந்தெடுக்கும் ஊழியைத்தை ஏழு சபைக்காலங்களிலும் தம்முடைய தூதர்களிடம் ஒப்படைக்கவில்லை. அதற்கென பிரத்தியேகமாக எந்தவிதமான ஊழியர்களையும் ஏற்படுத்தி, மணவாட்டியை தெரிந்தெடுக்கும் ஊழியத்தை ஒப்படைக்கவுமில்லை. கிறிஸ்து மட்டுமே அவருடைய மணவாட்டி யார் என்பதை அறிவார். அவரே அவளை தெரிந்தெடுக்கிறார். எப்பொழுது? உலகத்தோற்றத்துக்கு முன்னே. அவரே அவளை முன்னறிந்து, முன்குறித்து, அழைத்து, நீதிமானாக்கி,

மகிமைப்படுத்துகிறார். அவளை ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளுகிறார். அப்பொழுது அவள் எப்பொழுதும் அவருடனே கூட இருப்பாள்.

41. **சாயங்கால செய்தியாளனுடைய ஊழியம் என்ன?** தீர்க்கதரிசியின் செய்தி எங்களிடத்தில்தான் இருக்கிறது எனக் கூறும் இவர்கள் **முதலாவது** : தீர்க்கத்தரிசி வில்லியம் மரியன் பிரன்ஹாம் மூலம் எலியேசர் ஊழியம் நிறைவேறிற்று **என்றால்** மணவாட்டியானவள் ஈசாக்கை **சந்தித்திருக்கவேண்டும்**. ஏனென்றால் பழைய ஏற்பாட்டிலுள்ள எலியேசர், மணவாளன் வயல் வெளியில் வந்தபோது, மணவாட்டி ரெபேக்காளுக்கு ஈசாக்கை சுட்டிக்காட்டினான். **இரண்டாவது : தீர்க்கதரிசியின் காலத்தில் இயேசு கிறிஸ்து வந்திருக்கவேண்டும்**. ஏனென்றால் தீர்க்கத்தரிசி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி யோவான் ஸ்நானகன், இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக பூமியில் இருந்தபோது, இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை வந்தது. அப்படியே தீர்க்கதரிசி பூமியில் இருந்தபோது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் வந்திருக்கவேண்டும். **மூன்றாவது** : ஏழாவது முத்திரையின் இரகசியம்-கர்த்தருடைய வருகை. ஏழாவது முத்திரை உடைக்கப்பட்டு காட்சிக்கு வந்துவிட்டது **என்றால் கிறிஸ்துவும் வந்திருக்கவேண்டும்**. இதை தீர்க்கதரிசியே கூறுகிறார் என்று இவர்களது இரண்டாவது செய்தி குறிப்பு, பக்கம் 5, கடைசி பத்தியில் எழுதுகிறார்கள்.

42. இவர்களது உபதேசங்களை நாம் தியானிக்கும்போது, எல்லாமே யூகமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் **என்றால், சந்தித்திருக்கவேண்டும், இயேசு கிறிஸ்து வந்திருக்கவேண்டும், கிறிஸ்துவும் வந்திருக்கவேண்டும்** என்று எழுதி, தங்களது யூகத்தை தீர்க்கதரிசி கூறுகிறார் என அவர் மீது பழியை போட்டு, பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை கூறுகிறார்கள். இவர்கள் தங்களது உபதேசங்களை உறுதிப்படுத்த **வந்துவிட்டது, நிறைவேறிவிட்டது, முடிந்துவிட்டது** என்ற பூரண நிச்சயத்தோடு கூறவேயில்லை. அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கேயருக்கு தன் முதல் நிருபத்தில் **எங்களது சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரம் அல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது** என்கிறான். 1தெச. 1:5 ஆதலால் பரிசுத்த ஆவியோடும் (தீர்க்கத்தரிசியின் செய்திக்கு நம்மை வழிநடத்த முயற்சிக்கும் இவர்களிடம் தொடக்கம் முதல் வஞ்சிக்கிற ஆவியே கிரியைசெய்து வருகிறது என்பதை முன்பே எழுதியுள்ளேன்.) முழு நிச்சயத்தோடும் இல்லாத இவர்களது ஞானம் லௌகீக சம்பந்தமானதே.

43. **சாயங்கால செய்தியாளன்**. பக்கம் 70, பத்தி 249ஐ கவனித்தால், **கவனியுங்கள், கடைசிக்கால செய்தியாளன், அவனுடைய வேலையானது மணவாளனுக்கு மணவாட்டியை, பரிசுத்தவான்களை ஆயத்தம் செய்வதாகும். அதுதான், அவனுடைய செய்தியாயிருக்கும்**. ஆம், சாயங்கால செய்தியாளனது வேலையானது மணவாளனுக்கு மணவாட்டியை ஆயத்தப்படுத்துவதாகும். இது ஆதி. 24வது அதி. எலியேசர் ஊழியம் அல்ல. இது 1தெச. 4:16ன் ஊழியமாகும். அதாவது ஆரவாரம். மணவாட்டியை ஆயத்தப்படுத்தும் செய்தியாகும். இதைக்குறித்து **ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்** (மறுபதிப்பு) பக்கம் 43,44, கடைசிப்பத்தியை தியானியுங்கள். "கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும்போது : முதலாவது ஆரவாரம் புறப்பட்டுச் சென்றது. ஆரவாரம் என்பது ஜனங்களை ஒன்று கூட்டுவதற்கென்று அளிக்கப்படும் செய்தியாகும். இப்பொழுது தீவட்டிகளை சுத்தப்படுத்தும் சமயமாகும். எழுந்து உன் தீவட்டியை சரிப்படுத்து." இது ஏழாம் ஜாமத்தில் உரைக்கப்பட்டது. ஆறாம் ஜாமத்தில் அல்ல, ஏழாம் ஜாமத்தில். **மணவாளன் வருகிறார், எழுந்து உன் தீவட்டியை சரிப்படுத்து**. புத்தியுள்ள கன்னிகைகள் அதற்கு கீழ்படிந்தார்கள். சிலருடைய தீவட்டிகளில் எண்ணெய் இல்லாமலிருந்தது. இது தீவட்டிகளை சரிப்படுத்தும் நேரம். இது மல்கியா 4ம் அதிகாரத்தின் நேரம். இது லூக்.17ம் அதிகாரத்தின் நேரம். இக்காலத்துக்கென வேதம் விளம்பியுள்ள தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறும் நேரம் இது. அது தத்ரூபமாக நிறைவேறுவதை நீங்கள் காண்கிறீர்கள். மேலும் பக்கம் 41ல் 2வது பத்தியை கவனித்தால் **ஆரவாரம்** என்பது செய்தியாகும். அது ஜீவ அப்பமாக முதலில் புறப்பட்டுச சென்று மணவாட்டியை பிறப்பிக்கிறது.

44. மேற்கூறியப் பகுதிகளை நீங்கள் நன்கு தியானித்தால், சாயங்கால செய்தியாளனுடைய வேலை என்ன? மணவாளனுக்கு மணவாட்டியை ஆயத்தப்படுத்துவதாகும். இது, இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்ற சத்தமாகும். மத். 25:6 இந்த சமயம் மல். 4:6ன் நேரம். அதாவது பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கு திருப்பும் நேரம். மணவாட்டியை பிறப்பிக்கும் நேரம். **மல். 4ம் அதிகாரத்திலும், வெளி. 10:6லும் உரைக்கப்பட்ட இந்த தூதன் இரண்டு பெரிய காரியங்களைச் சாதிப்பார். முதலாவதாக மல்கியா உரைத்தப்படி, அவர் பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்திற்கு திருப்புவார். இரண்டாவதாக வெளி. 10ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு இடிமுழக்கங்களின் இரகசியத்தை (அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியத்தை) அவர் வெளிப்படுத்துவார். தேவனால் அருளப்பட்ட இந்த சத்தியம் பிள்ளைகளுடைய இருதயத்தை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்குத் திருப்பும்** (ஏழு சபை காலங்களின் வியாக்கியானம். பக்கம் 402, கடைசி பத்தி) இது லூக். 17:30ன் நேரம். இது மனுஷகுமாரன் தன்னை கடைசி நாளில் வெளிப்படுத்தும் நேரம். **இது கர்த்தருடைய வருகைக்கு முன்பாக மனுஷகுமாரன் தன்னை வெளிப்படுத்துவதாகும்**. இது குறித்து 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டதா? என்ற எனது செய்தி தொகுப்பில் 14வது பத்தி முதல் 22ம் பத்தி வரை பரிசுத்த ஆவியின் ஒத்தாசையோடு தியானியுங்கள். அப்பொழுது லூக். 17:30 கர்த்தருடைய இரகசிய வருகை அல்ல என்பது புலனாகும். இப்பொழுது கவனியுங்கள், இந்த சாயங்கால செய்தியாளனுடைய செய்தி மணவாளனுக்கு மணவாட்டியை

ஆயத்தப்படுத்துவதோடு முடிவு பெறுகிறது. ஆதலால் இந்த ஊழியத்தை ஆதி. 24வது அதி. எலியேசர் ஊழியத்தோடு ஒப்பிட முடியாது. அதற்கு வேதத்தில் எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது.

45. **பலமுள்ள வேறொரு தூதன்:** வேத இரகசியங்களின் வெளிப்பாட்டை பெற்றுவிட்டோம் எனக்கூறும் இவர்கள் ஆறாம் முத்திரை 685வது பக்கத்தில் 102வது பத்தியில் **ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் அந்த தூதன் (மணவாளன்) நின்றுகொண்டு இனி காலம் செல்லாது என்று சொல்வதை என்னால் காண முடிகிறது. அவருக்கு உண்மையாயிருந்த அந்த சிறு மணவாட்டி வரப்போகும் ஒரு நாளில் பறந்து சென்று இயேசுவின் கரங்களை அடைவாள்** என்று சகோ.பிரன்ஹாம் பிரசங்கித்ததாக தமிழ் மொழிபெயர்ப்பைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

46. இங்கு குள்ளநரி குட்டிச்சாத்தானுடைய வேலையை கவனியுங்கள். தொடக்கத்தில் **ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் அந்த தூதன்** அதற்கு அடுத்து அடைப்புக்குறிக்குள் **மணவாளன்** என்று செய்தியில் இல்லை. இது தீர்க்கதரிசியின் செய்தியோடு ஒன்றை கூட்டுவதாகும். அடுத்து **அவருக்கு உண்மையாயயிருந்த அந்த சிறு மணவாட்டி** என்று சகோ.பிரன்ஹாம் பிரசங்கிக்கவே இல்லை. அதாவது அந்த பலமுள்ள வேறொரு தூதனுடைய மணவாட்டி என்று தீர்க்கதரிசி பிரசங்கிக்கவில்லை.

47. மேலே குறிப்பிட்டுள்ள இந்த பகுதியை ஆங்கிலத்தில் வாசியுங்கள். **I can almost see that Angel standing there saying, at the last of that seventh angel's Message "Time shall be no more. That little, loyal Bride will fly away in to the arms of Jesus one of these days** என்றுள்ளது. இங்கு **that little loyal Bride** என்றுதான் உள்ளது. அதாவது **அந்த சிறு உண்மையுள்ள மணவாட்டி என்றே பொருள். அவருக்கு உண்மையாயிருந்த அந்த சிறு மணவாட்டி என்று பொருள்படாது. அவருக்கு உண்மையாயிருந்த என்று மொழி பெயர்த்தால் அந்த தூதனுக்கு உண்மையாயிருந்த என்று பொருளாகிவிடும். ஆனால் அது அப்படியல்ல. அந்த சிறு உண்மையுள்ள மணவாட்டி என்பதே சரியான மொழிபெயர்ப்பு.** ஆக நமது தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் செய்தியை கூட்டியும், குறைத்தும் தங்கள் சுய விருப்பு, வெறுப்புகளை நிறைவேற்ற மொழி பெயர்க்கிறார்கள், போதிக்கிறார்கள். தமிழ் மொழிபெயர்ப்பு ஆதியிலிருந்தே தீர்க்கத்தரிசியின் செய்தியை இரண்டாம் தரமான செய்தியாக்கி விட்டது. இப்படி முற்றிலுமாக மாறுபட்ட கருத்துக்களை கொடுக்கக்கூடிய அநேக தவறான தமிழ் மொழிபெயர்ப்புகள் உண்டு. இவர்கள் மொழி பெயர்ப்பு மூலம் இக்காலத்துக்குரிய செய்தியை தாறுமாறாக்குகிறது லூக். 17:30 மனுஷகுமாரன் ஊழியத்தை தாறுமாறாக்குகிறதாகும்.

48. நமது தமிழ் மொழிபெயர்ப்பு எங்கு சென்றுகொண்டிருக்கிறது? இது கூலிக்கு மாரடிக்கும் மொழிபெயர்ப்பாளர்களின் கரங்களில் சென்று தவித்துக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் இந்த கனடா நாட்டு முதலாளி சகோ.எட் பிஸ்கல் தான். தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிபெயர்த்து அச்சிடுபவர்கள் பெரும்பாலும் முன்னாள் குருதேவ் லஹரி கிருஷ்ணாவின், கிறிஸ்து பிரன்ஹாமின் மணவாட்டிகளே. இந்த பணியில் சத்தியத்தை நன்கு அறிந்து, அதில் உறுதியாக இருந்து, அதன்படி வாழ்க்கை வாழ்ந்துகாட்டும் நபர்களை காண்பது மிகமிக அரிது. ஆதலால்தான் செய்தியும் கீழ்த்தரமாக மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்படுகிறது. இந்த காரியமாக நான் சகோ.எட் பிஸ்கலுக்கு எழுதினேன். ஆனால் எல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதிய நிலைதான். ஆதலால் பிரியமானவர்களே, நீங்களாவது இவருக்கு கடிதங்கள் எழுதி மொழிபெயர்ப்பின் தன்மைகளை உணர்த்தி **WBGNS** ல் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வாருங்கள். சகோ.பிஸ்கல் விலாசம் **Bro.Edward Byskal, Bible Believer's Inc., 18603 – 60 th Avenue, Surrey, B.C, V3S7P4, Canada.** ஆனாலும் கோணலானதை நேராக்கக் கூடாது என்ற பிரசங்கியின் வாக்கும் மெய்யே.

49. பின்பு பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன் : மேகம் அவனை சூழ்ந்திருந்தது. அவனுடைய சிரசின் மேல் வானவில்லிருந்தது, நீங்கள் நன்றாக கவனித்தால், அது கிறிஸ்து என்று விளங்கும். பாருங்கள்? அவர் பழைய ஏற்பாட்டில் **உடன்படிக்கையின் தூதன்** என அழைக்கபடுகிறார். அவர் இப்பொழுது யூதர்களிடம் நேரடியாக வருகிறார். ஏனெனில் சபை அப்பொழுது ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டது. பாருங்கள்? அதுசரி... இப்பொழுது அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்தியாளனாக, தூதனாக வருகிறார். பாருங்கள்? சபை ஏற்கனவே எடுக்கபட்டு விட்டது, அல்லது அது எடுக்கப்படவிருக்கிறது. அவர் தமது சபைக்கு வருகிறார். இப்பொழுது கவனியுங்கள். (ஏழு முத்திரைகள், பக்கம் 120, பத்தி 29-31).

50. ஏழாம் தூதனுடன் செய்தி முடிவடைந்தது. ஏழாம் தூதன் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி முடித்துவிடுகிறான். ஆனால் அந்த தூதனோ (இங்கு தீர்க்கதரிசி பலமுள்ள வேறொரு தூதனை குறிப்பிடுகிறார். கா.யோ) சபையின் தூதர்களைப்போன்று பூமியில் தோன்றினவன் அல்ல. அவர்களுடைய பணி முடிந்துவிட்டது. அந்த தூதன் (பலமுள்ள வேறொரு தூதன். கா.யோ) அடுத்த அறிவிப்பைக்கொண்டு வருகிறார். (தூதன் என்றால் தூதை கொண்டுவருபவன் என்று பொருள்) அவர் வானத்திலிருந்து அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி வருகிறார். அவர் மேகத்தை ஆடையாக உடுத்தி, தலையின்மேல் வானவில் கொண்டவராயிருக்கிறார். **வானவில் உடன்படிக்கைக்கு அடையாளம்.** அவ்விதம் ஒரு பாதத்தை பூமியின்மேலும், ஒரு பாதத்தை சமுத்திரத்தின் மேலும் வைத்து **இனி காலம் செல்லாது** என்று ஆணையிடுகிறவர் கிறிஸ்துவே. (ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம் 71).

51. இவர்கள், **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடுவில் ஏழு சபை காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையிலுள்ள பிளவு** பக்கம் 123, பத்தி 41,42ஐ குறிப்பிட்டு : ஆகவே அந்த முத்திரைகள் உடைக்கப்பட்டு தேவ இரகசியம் வெளிப்படுகையில், அந்த தூதன், அந்த செய்தியாளன், கிறிஸ்து கீழே இறங்கிவந்து தம்முடைய பாதத்தை பூமியின் மேலும், சமுத்திரத்தின் மேலும் வைக்கிறார். அவருடைய சிரசின்மேல் வானவில் இருக்கிறது. பலமுள்ள தூதன் பூமிக்கு இறங்கும் இந்த வருகையின் நேரத்தில் அந்த ஏழாம் தூதன் பூமியில் ஏற்கனவே இருக்கிறான் என்பது நினைவிருக்கட்டும். யோவான் செய்தியை கொடுத்துக்கொண்டிருக்கும் போது அந்த சமயத்தில் மேசியா வந்ததற்கு இது ஒத்திருக்கிறது.

52. இதைக்கொண்டு தீர்க்கதரிசியின் காலத்தில் மணவாளன் தம்முடைய மணவாட்டிக்காக பூமியில் வந்துவிட்டார் என்பது பேய்த்தனத்துக்கடுத்த விளக்கம். இந்த பலமுள்ள தூதன் கிறிஸ்து தான். இதில் சந்தேகமேயில்லை. ஆனால் அவர் வானத்திலிருந்து, அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி **உடன்படிக்கையின் தூதனாக இனிகாலம் செல்லாது என்ற தூதைக்கொண்டு வந்த கிறிஸ்து. மணவாட்டிக்காக வந்த மணவாளனாகிய கிறிஸ்து அல்ல. மேலும் பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகை இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையும் அல்ல. தூதன் என்றாலே அவன் செய்தியை கொண்டுவருகிற ஒரு தூதன் தான்.**

53. **சூரிய அஸ்தமன மலையில் நிகழ்ந்தது என்ன?** தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். இந்த சந்தடியெல்லாம் அதைக்குறித்துதான். கவனியுங்கள் அது வெளி.10:1-7 முடிய வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாகும். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவ இரகசியம் நிறைவேறும். வெளி. 10:1-7ன் விளக்கம் மறைக்கப்பட்ட இரகசியம் கடைசி சபை காலத்துக்கு அளிக்கப்படும் கடைசி செய்தி, இந்த காலத்தில் அப்படியே நிறைவேறுகிறது. பரி. லூக்.17:30 **மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில்.** (மலைமேலுள்ள கவர்ச்சி என்ன? பக்கம் 41, பத்தி 148, நாள் 25.7.1965).

54. அதன் பின்பு வேறொரு தூதன் இறங்கி வருவதை யோவான் காண்கிறான். இது செய்தி தன்னிடம் அளிக்கப்பட்ட பூமியைச் சேர்ந்த தூதன் அல்ல. ஆனால் வேறொரு தூதன், மகத்தான தூதன் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறார். அவர் ஏழு முத்திரைகளை உடைத்து அதன் இரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவர் அந்த அற்புதத்தை முதலில் வானத்தில் காண்பித்தார் ..... இதோ அது லைஃப் பத்திரிக்கையில் வெளியாகி இங்கே தொங்கிக்கொண்டிருக்கிறது. அது இன்னும் அவர்களுக்கு மர்மமாயுள்ளது. அவர் அதை பூமியில் செய்வதற்கு முன்பே, அதை வானங்களில் வெளிப்படுத்துகிறார். அவர் எப்பொழுதும் அப்படியே செய்து வருகிறார். **அவர் முதலில் தமது அடையாளங்களை வானங்களில் காண்பிக்கிறார்.** வானங்கள் அவரை வெளிப்படுத்துகின்றன என வேதம் கூறுகிறது. (சங். 19:1) (ஷாலோம், பக்கம் 22,23, பத்தி 64-66, நாள் 12.1.1964.)

55. **இங்கு கவனித்தீர்களா? வெளி 10:1-7 சமயம், மணவாளன் மணவாட்டிக்காக வந்த சமயம் அல்ல. இது கர்த்தருடைய இரண்டாம் வருகையும் அல்ல. மாறாக இங்கு தேவன் தம்முடைய வார்த்தையை அடையாளங்களினால் உறுதிப்படுத்துகிறார். இது கர்த்தர் தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களினால் தீர்க்கதரிசியின் ஊழியத்தை உறுதிப்படுத்துவதாகும், வானத்தில் அடையாளங்களினால் உறுதிப்படுத்துகிறார்.**

56. எடுத்துக்கொள்ளப்படுதலாவது நம் முன்னிருக்கும் இந்நாட்களில், பரலோகத்தை நோக்கி புறப்படும் இக்காட்சி எத்தகைய பவனியாயிருக்கும் என்பதை சிந்தனை செய்து பாருங்கள்.... **சகோதரரே, வரப்போகும் அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறோம்.** முதலாம் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ந்து விட்டது. (தீர்க்கதரிசி இங்கு மத். 27:52,53 நிகழ்ச்சியை குறிப்பிடுகிறார். கா.யோ) **இரண்டாவது இப்பொழுது அருகில் உள்ளது.** எடுத்துக்கொள்ளப்படுதல் மூன்று முறை நிகழும். வெளி 11:11,12 கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். (ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல். பக்கம் 54, பத்தி 3,4, நாள் 12.4.1965).

57. சபையே, அவர் இந்நாட்களில் ஒன்றில் வருவார். அவர் முதல் தரம் வந்தது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் அவர் மறுபடியும் வருவார். எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்துங்கள். உங்களை பதரிலிருந்து பிரித்துக்கொள்ளுங்கள். எதிர்நோக்குதலுடன் இருங்கள். (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு. பக்கம் 72, பத்தி 1, நாள் 25.11.1965).

58. **பாருங்கள். 1965 வரை எடுத்துக்கொள்ளப்படுதல் இரண்டாமுறை நிகழவில்லை. அந்த மணிநேரத்துக்காக தீர்க்கதரிசி கூட காத்திருந்தார். ஆவலுடன் அதை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். இப்படியிருக்க, இவர்கள் 1963ல் சபை காலங்களில் மரித்த பரிசுத்தவான்கள் யாவரும் உயிரோடு எழுந்துவிட்டார்கள், எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்று கூறுவது வஞ்சிக்கப்பட்டவர்களின் வஞ்சிக்கிற உபதேசமாகும். கள்ள, கபடமுள்ள வேலையாட்களின் உபதேசமாகும். இவர்களுக்கு செவிகொடுத்து மோசம்போகாதீர்கள்.**

59. **பொதுவாக குழப்பத்தின் பிள்ளைகள் தீர்க்கதரிசியின் ஊழியத்தில் எபி. 13:8, யோ. 14:12,**

**லூக். 17:30, மல். 4:6, வெளி. 10:6 நிறைவேறுதலை புரிந்துகொள்ளாமல் தலைக்கல் வந்துவிட்டது, தலைக்கல் சரீரத்துடன் இணைந்துவிட்டது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது எனக்கூறி மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள். குழப்பத்திலுள்ளவர்கள் எக்காளம் ஊதும்போது யார் அவர்கள் பின் செல்வார்கள்? குழப்பத்திலுள்ளவர்களே.**

60. பிரியமானவர்களே, மேலும் செய்தியைத் தியானியுங்கள். மனுஷகுமாரன் வெளிப்படும் அதேநாளில் (வெளி. 10:1-7) ஏழாம் தூதனின் செய்தி முத்திரைகளை திறக்கும். ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார். இவ்விருவரும் (அதாவது மனுஷகுமாரன் மற்றும் ஏழாம் சபைகால தூதன். கா.யோ) யாரென்று இப்பொழுது புரிகிறதா? இதுதான் இதுவரை உங்களுக்குப் புரிந்துகொள்ள முடியாத கடினமான செயலாய் இருந்து வருகிறது. **ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவர் மக்களுக்கு மனுஷகுமாரன் யாரென்று வெளிப்படுத்துகிறார்.** (கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள். பழைய பதிப்பு. பக்கம் 82, பத்தி 1,2, நாள் 25.7.1965)

61. **இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவன் நான் அல்ல. வரப்போகும் காரியங்களை பிழையின்றி அறிவிப்பவன் நான் அல்ல. அவர் இந்தவகைய செயல்களைப் புரியும்போது நான் அவர் அருகில் இருக்கிறேன். அவர் என்னை தமது சத்தமாக உபயோகித்து வருகிறார். என் மூலம் அவர் பேசுவதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணித்து விட்டேன். அது ஏழாம் தூதனல்ல. அது மனுஷகுமாரன் வெளிப்படுதலாகும். அது தூதனல்ல, அவனுடைய செய்தி மறைபொருளாயிருக்கிற தேவனுடைய இரகசியம் வெளிப்படுதலாகும். அது மனிதனல்ல, அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷகுமாரன் எனப்படுவது கிறிஸ்து. அவரைத்தான் நீங்கள் புசித்து வருகிறீர்கள்.** (கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள். பழைய பதிப்பு. பக்கம் 84, பத்தி 1,2, நாள் 25.7.1965).

62. இங்கு நான் மேலே **அது தூதனல்ல, அவனுடைய செய்தி என்று எழுதியுள்ளேன்.** ஆனால் தமிழ்மொழி பெயர்ப்பில் **அவனுடைய செய்தி** என்ற வார்த்தை பழைய பதிப்பிலும், புதிய பதிப்பிலும் இல்லை. ஆங்கிலத்தில் இது இவ்வாறாக உள்ளது. **It wasn't the seventh angel, oh no; it was a manifestation of the Son of man. It wasn't the angel, his Message; it was the mystery that God unfolded. (The anointed ones at the end time. Page 63, Para 269.) அவனுடைய செய்தி** என்ற வார்த்தையின் முக்கியத்துவம் இவர்களுக்கு புரியவில்லையா? கூலிக்கு மாரடிக்கிறவர்களிடம் என்ன பொறுப்புணர்வு இருக்கும்? எதையோ மொழிபெயர்த்துப் போடவேண்டியது, கூலியை பெற்றுக்கொள்ள வேண்டியது. தீர்க்கதரிசியின் செய்தியை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து, இன்னும் கூறப்போனால் அநேக இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து அவைகளை பிரிண்ட் செய்கிறோம் என்ற போர்வையின்கீழ் பிழைப்பு தான் நடந்து கொண்டுவருகிறது. செய்தியை தாறுமாறாக்குகிறோமே என்ற வெட்கம், மானம் இவர்களுக்கு அறவே இல்லை. ஏனென்றால் இவர்கள் ஆவிக்குரிய கற்பை, கன்னித்தன்மையை இழந்தவர்கள் தானே.

63. அடுத்து **இயேசுவை நோக்கிப்பார்த்தல்** செய்தியில் பத்தி 179ஐ வாசியுங்கள். இது 22.1.1964ல் பிரசங்கிக்கப்பட்டது. **ஆனால் அவர், சோதோமில் நடந்ததுபோன்று, இந்த கடைசி நாட்களில் மனித சரீரத்தில் வெளிப்படுவார் என்று வாக்களித்திருக்கிறார்** என மொழி பெயர்த்துள்ளார்கள். இதை ஆங்கிலத்தில் வாசியுங்கள் **But He promised in the last days that He would manifest Himself in human flesh like He did there at Sodom.** இதன் மொழிபெயர்ப்பு **ஆனால் அவர் அங்கே சோதோமில் செய்ததுபோல, இந்த கடைசி நாட்களில் தம்மை மனித சரீரத்தில் வெளிப்படுத்துவார் என வாக்களித்துள்ளார்** என இருக்கவேண்டும். இங்கு **மனித சரீரத்தில் வெளிப்படுவார்** என்பதற்கும் **தம்மை மனித சரீரத்தில் வெளிப்படுத்துவார்** என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்து கொள்ளமுடிகிறதா? சுருக்கமாக சொல்லப்போனால் வஞ்சக ஆவியினால் வழி நடத்தப்படும் இந்த தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தீர்க்கதரிசியை இயேசு கிறிஸ்துவாக மாற்றி உங்களை மோசம் போக்குகிறார்கள்.

64. பிரியமானவர்களே, காலம் பொல்லாததாக இருப்பதால், தீர்க்கதரிசி வேதத்திலிருந்துதான் எடுத்துக் கூறுகிறார், அவர் தன் சுயமாய் எதுவும் கூறுவதில்லை என்பதை மறந்து : எதை எடுத்தாலும், எதற்கெடுத்தாலும் தீர்க்கதரிசி, தீர்க்கதரிசி என்று கூறிக்கொண்டே சுற்றித்திரியும் ஓநாய் கூட்டங்களை நம்பி மோசம் போகாதீர்கள். இவர்கள் கிறிஸ்து மீது உள்ள உங்கள் நோக்கத்தை, விசுவாசத்தை திசை திருப்பி, அதை தீர்க்கதரிசி மீது கொண்டுவந்து, அவரையே எல்லாவற்றிற்கும் எல்லாமாக்கி, உங்களை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தவிடாமல், ஆவலாய் எதிர்நோக்கி கொண்டிருக்கும் உங்கள் வாஞ்சையை முறியடிக்க : இதோ கர்த்தருடைய வருகை வந்துவிட்டது எனக்கூறி உங்களை திசைதிருப்ப, மோசம்போக்க பிரயாசப்படுகிறவன் பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

65. முடிவாக, பிரியமானவர்களே இதுவரை :

அ. **தலைக்கல் வரவில்லை**

ஆ. **தலைக்கல் சரீரத்துடன் இன்னும் இணையவில்லை**

இ. **ஆதி. 27 அதி. எலியேசர் ஊழியம் ஏழாம் சபைக்கால தூதனுக்கு கிடையாது.**

ஈ. **ஏழாம் முத்திரை உடைக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அதன் மூன்று பகுதிகளில் நாம் முதற்பகுதியில் தான் இன்னும் இருக்கிறோம்.**

உ. **1தெச. 4:13-17ல் முதற்பகுதி ஆரவாரம். அதாவது சத்தம். இது மணவாட்டிகளை சுத்தப்படுத்தும் நேரம். 2ம், 3ம் பகுதிகளாகிய பிரதான தூதனுடைய சத்தம், (முற்காலங்களில் நித்திரை அடைந்துள்ள மணவாட்டிகளின் உயிர்த்தெழுதல்), தேவ எக்காளம் (ஆகாயத்தில் நடக்கும் விருந்துக்காக உயிரோடெழும்பின மணவாட்டியும், உயிரோடுள்ள மணவாட்டியும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்), இதுவரை நிகழவில்லை.**

ஊ. **ஏழு தூதர்களின் சந்திப்பு, இது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில்.**

எ. **பலமுள்ள வேறொரு தூதனின் காட்சி. இது இனி காலம் செல்லாது என்ற தூதுடன் வந்த உடன்படிக்கை தூதனின் வருகை. இது கர்த்தருடைய இரண்டாம் வருகை அல்ல.**

66. பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதீர்கள். ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, தீர்க்கதரிசியின் செய்தியிலிருந்து தொகுத்தெடுத்தக் குறிப்புகள் என்ற பேரிலாவது, மணவாட்டி ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்று சொல்லப்பட்டால் உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் முற்காலத்தில் மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுதல் நடக்கும் முன் அந்த நாள் வராது. அதோடு மட்டுமல்ல இஸ்ரவேலில், அவர்கள் ஆலயத்தொழுகையை ஏற்படுத்திக் கொள்ளும்வரை சபை எடுத்துக் கொள்ளப்படாது. வாசியுங்கள், இப்பொழுது அவர்கள் என்னவாயிருக்கிறார்கள்? இப்பொழுது நான் புதிதாகத் தெரிந்துகொண்டேன். அவர்கள் இப்பொழுது ஒரு தேசமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். அது சரிதானே? ஆனால் இன்னமும் அவர்களுக்கு ஆலயத்தொழுகை ஏற்படவில்லை. அவர்கள் ஆலயத்தொழுகையை ஏற்படுத்திக் கொள்ளும்போது, சபையானது இங்கிருந்து போய்விட்டிருக்கும். (தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறு விதமான நோக்கங்கள், பத்தி 141) நான் தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து முன்பும், இப்பொழுதும் தொகுத்துக் கொடுத்துள்ள ஞானநன்மைகள் இன்னும் ஒருவனுக்கு மறைபொருளாயிருந்தால், அது கெட்டுப்போகிறவர்களுக்கே மறைபொருளாய் இருக்கும்.

67. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம் அனைவரோடுங்கூட என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

டிசம்பர் : 2000

**கிறிஸ்துவின் அன்பில்,**

**சகோ. காலேப் யோசுவா.**